भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनूभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saga

புது தில்லி, 2000, மார்ச் 6ஆம் நாள் திங்கட்கிழமை/1922 சக


## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department), New Delhi

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம் (சட்டமியற்றுத் துறை), புதுதில்லி

The translation in Tamil of the Judicial Officers Protection Act, 1850 (18 of 1850), The Powers of Attorney Act, 1882 (7 of 1882), The Prevention of Seditious Meetings Act, 1911 (10 of 1911), The Destructive Insects and Pests Act, 1914 (2 of 1914), The Collections of Statistics Act, 1953 (32 of 1953), The State Armed Police Forces (Extension of Laws) Act, 1952 (63 of 1952), The Foreign Jurisdiction Act, 1947 (47 of 1947), are hereby published under the Authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under Clause (a) Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

நீதித்துறை அலுவலர்கள் பாதுகாப்புச் சட்டம், 1850 (18/1850), பகர அதிகாரஆவணச் சட்டம், 1882 (7/1882), அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிக் கூட்டங்கள் தடுப்புச் சட்டம், 1911 (10/1911), அழிவு செய்யும் பூச்சிகள் மற்றும் நாசகாரப் பூச்சிகள் சட்டம், 1914 (2/1914), புள்ளி விவரங்களைத் தொகுத்தல் சட்டம், 1953 (32/1953), மாநில ஆயுதக் காவற்படைகள் (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டம், 1952 (63/1952), அயல்நாட்டு அதிகாரவரம்புச் சட்டம், 1947 (47/1947), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு, குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) இன்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல்வேண்டும்.

[Price Rs. 22.00]

# புள்ளி விவரங்களைத் தொகுத்தல் சட்டம், 1953

## (சட்ட எண் 32/1953)[1]

தொழில்கள், வணிகம் மற்றும் வாணிபம் தொடர்பான குறித்தசில வகைகளின் புள்ளிவிவரங்களைத் தொகுப்பதை எளிதாக்குவதற்கான ஒரு சட்டம்.

நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:-

1. (1) இந்தச் சட்டம், புள்ளிவிவரங்களைத் தொகுத்தல் சட்டம், 1953 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறிக்கலாகும் [2][தேதியில் செல்லாற்றல் பெறும்.]

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,- பொருள் வரையறைகள்.

(அ) "உரிய அரசாங்கம்" என்பது,-

(i) பிரிவு 3இன்படி மைய அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்ட பணிப்புரையின்படி புள்ளிவிவரங்களைத் தொகுத்தல் தொடர்பாக, மைய அரசாங்கம் என்றும்,

(ii) அந்தப் பிரிவின்படி மாநில அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்ட பணிப்புரையின்படி புள்ளிவிவரங்களைத் தொகுத்தல் தொடர்பாக, மாநில அரசாங்கம் என்றும்,

பொருள்படும்;

(ஆ) "வாணிப நிறுவனம்" என்பது, வணிகத்தில் அல்லது வாணிபத்தில் ஈடுபட்ட வரையறுக்கப்பட்ட பொது நிறுமம், அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது நிறுவகம் அல்லது பிற நபர் எவரும் அல்லது நபர்களின் குழு எதுவும் என்று பொருள்படும், மற்றும்-

(i) வங்கித்தொழிலில் அல்லது காப்பீட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தை,

(ii) நிதிக் கூட்டுருமத்தை,

(iii) கப்பற்சரக்கனுப்பீடு மற்றும் கடற்பயணத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தை,

(iv) பங்குகள், மூலதனப்பங்குகள், கடனீட்டு ஆவணங்கள், பண்டங்கள் ஆகியவற்றில் வணிகத்தொடர்புடைய தரகர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தை,

(v) விளம்பர அறிவுரையாளர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தை,

(vi) எளிதான கட்டமைப்புடைய இருப்பூர்திப் பாதையை,

---

1. நோக்கங்கள் மற்றும் காரணங்களின் விவரவுரைக்காக இந்திய அரசிதழ் 1952, பகுதி II, பிரிவு 2, பக்கம் 625-ஐப் பார்க்கவும்.

இந்தச் சட்டம், 11/1963 ஒழுங்குமுறைப்படுத்தும் விதியால் கோவா, தமண் மற்றும் டையூ ஒன்றியத்து ஆட்சி நிலவரைகளுக்கும் (1-2-1965 முதல் செல்திறம் பெறுமாறு) 2-4-1962 தேதியிடப்பட்ட நிலையாணை1089 மூலம் பாண்டிசேரி ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்கும் நீட்டிக்கப்பட்டது; 1962 இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), பக்கம் 1127ஐப் (14-4-1962) பார்க்கவும்; கோவா இப்போது ஒரு மாநிலமாகியுள்ளது. சிக்கிமிற்கு நீட்டிக்கப்பட்டதை 529(2)-ஐப் பார்க்கவும்; 15-2-1984 அன்று சிக்கிமிற்கு நீட்டிக்கப்பட்டது. நிலையாணை 216(2)/1984-ஐப் பார்க்கவும்.

2. இந்தச் சட்டம் 10-11-1956 அன்று செல்லாற்றலுக்கு வந்தது. 10-11-1956 தேதியிடப்பட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி I, பிரிவு I, பக்கம் 1027ஐப் பார்க்கவும்.